செ.வெ.எண்: 49/2020 நாள் : 24.01.2020

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், இன்று (24.01.2020) தேசிய வாக்காளர் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

**வலுவான மக்களாட்சிக்கு தேர்தல் கல்வியறிவு (Electroal Literacy for Stronger Democracy)** என்ற கருத்தை மையமாக வைத்து 10 - வது தேசிய வாக்காளர் தினம் -2020-யை 25.01.2020 அன்று, நாடு முழுவதும் கொண்டாடுவது தொடர்பாக, இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி திருப்பூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்குச் சாவடிகள், பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் தேர்தல் கல்வியறிவு குழுக்கள் ஆகியவற்றில் 25.01.2020 அன்று பேரணி, போட்டிகள் மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களிலும் வாக்காளர் உறுதிமொழி ஏற்பது குறித்து அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, 24.01.2020 அன்று வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார். பேரணி மாவட்ட ஆடசியர் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, பல்லடம் சாலை, தமிழ்நாடு திரையரங்கு, லட்சுமி திருமண மண்டம் வழியாக சென்று எல்.ஆர்.ஜி. அரசு பெண்கள் கலை கல்லூரியில் முடிவுற்றது. பேரணி முடிவுற்றபின் பேரணியில் கலந்து கொண்டவர்கள் வாக்களர் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். இந்த பேரணியில் எல்.ஆர்.ஜி. அரசு பெண்கள் கலை கல்லூரி மற்றும் புனித ஜொசப் அரசு பெண்கள் கலை கல்லூரி மாணவிகள் 250 பேர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின் போது, திருப்பூர் மாநகராட்சி ஆணையர், திரு. க. சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திரு. எம். சாகுல் ஹமீது தேர்தல் தனி வட்டாட்சியர், திரு. ச. முருகதாஸ், உதவி ஆணையர், திரு. சி. கண்ணன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**